செ.கு.எண் - 62 நாள் - 9-2-12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 9.2.2012

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், மேல்முடியனூர் மதுரா, அம்மாபாளையம் கிராம அரசு மேல்நிலைப் பள்ளி எதிரில், செங்கம் - திருவண்ணாமலை தேசிய நெடுஞ்சாலையில் 7.2.2012 அன்று வேன் மீது, திருவண்ணாமலையிலிருந்து, பெங்களூர் சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில், வேன் ஓட்டுநர் மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கிட்டாலங்குடி, சி.புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பெரியசாமி என்பவரின் மகன் மாரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த ஓட்டுநர் திரு. மாரியின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சாலை விபத்தில் காலமான திரு. மாரியின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர் 1/4

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9